# நவபுலியூர் தரிசனம்
## (யாத்திரை)




**SRI NITHYA KALYANI AMMAN SEVA SAMITHI RELIGIOUS TRUST**
(SNASS RELIGIOUS TRUST)
Apt. No.2, Raj Residency, 6/9, Seethammal Colony, Alwarpet, Chennai - 600 018.
Phone : 044-24311096, Email : snasstpuliyur@gmail.com


Navapuliyur Yatra
1. Perumpatrapuliyur (known as Chidambaram)
2. Thirupadiripuliyur (Thiruppapuliyur)
3. Erukkathampuliyur(Rajendra Pattinam)
4. Omampuliyur
5. Kanattampuliyur(near Muttam)
6. Sirupuliyur
7. Athipuliyur
8. Thappalampuliyur
9. Perumpuliyur
• Final Destination is Thiruppattur (near Samayapuram) where Vyagrapadar and Pathanjaleeswarar attained Mukthi.
• Also is common practise to visit Sri Ranganatha Swami of Sri Rangam also as a conclusion of the yatra.
10 h 32 min
409 km
Thirupapuliyur
(Thirupadiripuliyur)
Rajendra pattinam
(Erukkathampuliyur)
Chidambaram
(Perumpatrapuliyur)
(Kanattampuliyur)
Muttam
Omampuliyur
Sirupuliyur
Thiruvarur
Athipuliyur
Thappalampuliyur
Perumbuliyur
Srirangam
Thirupattur
கள்ளக்குறிச்சி
Ulundurpet
உளுந்தூர்பேட்டை
Chinnasalem
சின்னசேலம்
Attur
Neyveli
நெய்வேலி
Perambalur
பெரம்பலூர்
Mayiladuthurai
மயிலாடுதுறை
Kumbakonam
கும்பகோணம்
Karaikal
காரைக்கால்
Samayapuram
சமயபுரம்
Tiruchirappalli
திருச்சிராப்பள்ளி
Thanjavur
தஞ்சாவூர்
Google

# நவபுலியூர் தரிசனம்

## (யாத்திரை)




வெளியீடு

SRI NITHYA KALYANI AMMAN SEVA SAMITHI RELIGIOUS TRUST

(SNASS RELIGIOUS TRUST)

## DISTANCES & APPROX TIME BY ROAD (BASIS GOOGLE MAP)

| From | To | Approx. Distance (Km) | Approx.Time (By Road) |
|---|---|---|---|
| Chennai | Chidhambaram ( Perumbatrapuliyur) | 218 | ( 5 Hrs 30mts) |
| Chidhambaram | Thiruppadiripuliyur | 44 | 1hr 10 mts |
| Thiruppadhiripuliyur | Erukathampuliyur ( Rajendra Pattinam) | 73 | 1 hr 47 mts |
| Erukathaampuliyur | Omampuliyur | 48 | 1hr 15 mt |
| Omampuliyur | Kaanaattampuliyur ( Near Muttam) | 7 | 15mts |
| Kaanaattampuliyur | Sirupuliyur | 35 | 1hr 20 mts |
| Sirupuliyur | Athipuliyur | 46 | 1hr 30 mts |
| Athipuliyur | Thappalampuliyur | 10 | 20mts |
| Thappalampuliyur | Perumbuliyur | 83 | 2hrs 30mts |
| Perumbuliyur | Thirupattur | 72 | 1hr 40 mts |
| Thirupattur | Srirangam | 27 | 35 mts |

**முக்கிய குறிப்பு: இந்த நவபுலியூர் யாத்திரையை மேற்கொள்ளும் அன்பர்கள் வசதிக்காக, அந்தந்த கோவிலின் தொடர்பு எண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 7 புலியூர்கள், பெரும்பாலும் சிற்றூர்களில் அமைந்திருப்பதால், தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆலயம் திறந்து, அர்ச்சகர்கள் இருப்பதை உறுதி செய்து கொண்டு கோவிலுக்குச் செல்லவும்.**

# நவபுலியூர் தரிசனம் (யாத்திரை)

*தென்னாடுடைய சிவனே போற்றி!*
*எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!! போற்றி!!*

அன்பார்ந்த ஆன்மீக பெருமக்கள் யாவரும் மிகுந்த நற்பலன்களை அடையவும், முன்ஜன்ம வினைகள் தீரவும் எங்கும் நிறை பரம்பொருளின் பெருங்கருணையை பெற்று உய்யவும் ஆடல்வல்லான் ஆன ஆனந்த நடராஜ பரம்பொருளால் ஸ்ரீ வியாக்ரபாத முனிவருக்கும் ஸ்ரீ பதஞ்சலி முனிவருக்கும் உபதேசிக்கப்பட்ட இந்த நவபுலியூர் தரிசனமானது மிகவும் பழமையானது ஆகும்.

சித்தர் பெருமக்களாலும் மண்டூக மகரிஷி என்னும் ரிஷியாலும் மேற்கொள்ளப்பட்டு பயன் பெற்ற யாத்திரையாகும். திருச்சிற்றம்பலம் என்னும் ஸ்ரீ சிதம்பரத்தில் ஸ்ரீ வியாக்ரபாத முனிவரும், ஸ்ரீ பதஞ்சலி மஹரிஷியும் மோட்சத்தை வேண்டி நின்றபொழுது எம்பெருமான் ஆடல் அரசன் அவர்களை இந்த நவபுலியூர் யாத்திரையை மேற்கொண்டு கடைசியாக அதை ஸ்ரீரங்கத்தில் முடித்து கொள்ளுமாறு கட்டளையிட்டார். ஸ்ரீரங்கத்தில் உள்ள ரங்கராஜனும், சிதம்பரத்தில் உள்ள நடராஜனும் ஒரே பரம்பொருளின் இரு வடிவேயாகும் என்று பக்த பெருமக்களுக்கு உணர்த்திய யாத்திரையாகும்.

11, 12ம் நூற்றாண்டுக்கு முன்பாக இந்த நவபுலியூர் யாத்திரை ப்ரஸித்தி பெற்றே இருந்தது. அதன்பின் ஏற்பட்ட சிவ வைணவ

பேதத்தாலேயே இந்த யாத்திரையின் முக்கியத்துவம் மறைந்தது. பின்பு சைவ பெருமக்களால் அது பஞ்சபுலியூர் தரிசனமாயிற்று. ஆனால் இன்று சனாதனதர்மத்தை கடைபிடிக்கும் யாவரும் நம்முடைய பேதங்களை மறந்து பரம்பொருளின் இரு வடிவங்களையும் தரிசித்து நற்பயன்களை பெறவேண்டும்.

இது மோட்சயாத்திரை என்றும் ஏன் அழைக்கப்படுகிறது என்றால் இந்த யாத்திரையின் முடிவில் நாம் பிரும்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளையும் தரிசிக்கிறோம். பின்பு சதாசிவ தத்துவமான ஸ்ரீ ஆனந்த நடராஜ பரம்பொருளுடன் கலந்துவிடுகிறோம். ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் மற்றும் அநுக்ரஹித்தல் ஆகியவைகளை பரம்பொருளான ஒன்றே வெவ்வேறு வடிவம் தாங்கி நடத்திவருகிறது. இதுதான் ஸனாதன தர்மமான நமது இந்து மதத்தின் கோட்பாடாகும். இதில் உயர்வு தாழ்வுகளை பார்ப்பது நமது அறியாமையின் வடிவமேயாகும்.

இப்புவியை நடத்த இறைவன் எடுத்த வடிவங்கள் தான் எத்தனை எத்தனை. ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலையை அடையும்போது இந்த உண்மை நன்றாகவே புலப்படுகிறது. இன்றைய கால கட்டத்தில் நாம் நமது உட்பிரிவுகளை மறந்து நம்முடைய இந்து தர்மத்தின் உன்னத கோட்பாடான ஏக இறைவனை துதித்து நம் கர்மவினைகள் தீர இறைவனாலேயே வடிவமைக்கப்பட்ட நவபுலியூர் யாத்திரையை மேற்கொண்டு பயன் பெறுவோமாக.

நவபுலியூர் யாத்திரையின் 9 புலியூர்களையும் தரிசிப்பது நவக்கிரஹ அருளையும் பெறுவதாகும். நமது விதியின் பயனானது நவக்கிரஹங்கள் வழியாகவே செயல்வடிவம் கொடுக்கப்பெற்று நமக்கு அவற்றை அனுபவிக்கும்படியாக எண்ணங்களாகவும் செயல்களாகவும் மாற்றப்படுகிறது. நாம்

வெறும் நவக்கிரஹங்களை தொழுவதால் மட்டும் நம் வினைப்பயனை மாற்ற இயலாது. அக்காலங்களில் வினைப்பயன்கள் தீர "தீர்த்தயாத்திரை" என்னும் க்ஷேத்ராடனம் வழியாக சிலபல திருத்தலங்களை தரிசிப்பதே சிறந்த பரிகாரமாக அமைந்தது. இன்றும் எத்தனையோ ஹோமங்களாலும், வேறுபல வழிகளில் செய்யப்படும் பல்வேறு பரிகாரங்களாலும் பலர் பலன் அடையாமல் கருமவினை தீர என்னவழி என்றே திகைத்து நிற்கிறார்கள். முன்னை வினையிரண்டும் வேர் அறுத்து முன் நிற்கும் பேரருளாளனை யாத்திரை மூலமாக தரிசிப்பதே சிறந்த பரிகாரமாகும்.

சோழநாட்டில் புண்ணிய பலன்களை பெற்றுதரும் இந்த நவபுலியூர் தரிசனத்தை மேற்கொண்டு ஆன்மீக பெருமக்கள் யாவரும் நற்பலன்களை அடைய எல்லாம் வல்ல ஆடலரசனையும், அரங்கனையும் ப்ரார்த்திக்கிறோம்.

## நவபுலியூர் தரிசனம் செய்யும் முறை

### 1. பெரும்பற்ற புலியூர்

**இறைவன் : மூலட்டானேசுவரர்**

**இறைவி : சிவகாம சுந்தரி**

**ஸ்தல விருட்சம் : தில்லை மரம்**



பெரும்பற்ற புலியூர் என்னும் சிதம்பரம் முதலில் சிதம்பர நாதரையும் அவ்விடம் உறையும் மூலட்டானேசுவரரையும், அம்பிகை சிவகாம சுந்தரியையும் தரிசிக்க வேண்டும். நேரம் இருப்பவர்கள் சிதம்பரத்தில் தங்கி அர்த்தஜாம பூஜையை தரிசிப்பது விசேஷம். அடுத்தநாள் காலை சூரியோதயம் காலத்தில் நடைபெறும் திருவனந்தல் பூஜையை காணவேண்டும். இது **சூரிய பரிகாரதலமாகும்.**

வியாக்ரபாதருக்கும், ஸ்ரீ பதஞ்சலிமுனிவருக்கும் ஆனந்த நடன காட்சி தைப்பூசம் அன்று அருளிய ஸ்தலமும் நவபுலியூரில் முதன்மையான தலமும் ஆகும். நால்வர் பெருமக்களும் பாடி துதித்த தலம். தில்லை மூவாயிரத்தாரால் இன்றும் வழிபடப்பெறும் தலம்.

நடராஜபெருமானின் பேரருளுடன் அடுத்த புலியூர் செல்வோம்.

## 2. திருப்பாதிரிப் புலியூர்



**சந்திரபரிகாரதலமான** திருப்பாதிரிப் புலியூர் இரண்டாவது புலியூர், உபமன்யுவுக்கு அம்பாளின் சாபத்தை மாற்றி விமோசனம் கொடுத்த தலம்.

**இறைவன் : பாடலீஸ்வரர் என்னும் தோன்றாதுணைநாதர் (ஸ்வயம்புத் திருமேனி) இறைவி - பெரியநாயகி, ஸ்தல விருட்சம் - பாதிரிமரம்** அப்பர் பெருமானை கடலில் இருந்து கரையேற்றிய திருத்தலம்.

சந்திர க்ருஹபரிகாரஸ்தலமான திருப்பாதிரிப் புலியூர் வியாக்ரபாதராலும் உபமன்யுவாலும் வழிபடப்பெற்றது. ஸ்வயம்பு திருமேனி சோழ மற்றும் பல்லவ அரசர்களால் கட்டப்பட்ட கோயில் கடலூரில் அமையப்பெற்றுள்ளது. ஒருமணிநேர பயணம், இவ்வாலய தரிசனம் 16 முறை காசியை தரிசித்த பலனையும், 8 முறை திருவண்ணாமலையை தரிசித்த பலனையும், ஒருமுறை சிதம்பரத்தை தரிசித்த பலனையும் அளிக்கவல்லது. அம்பிகை பெரியநாயகி பக்தபெருமக்களை மிகுந்த வாஞ்சையோடு அணைத்துகொள்ளும் தலம் அம்மையப்பர் ஸ்தலம்.

## 3. எருக்கத்தம்புலியூர்



எருக்கத்தம்புலியூர் என்னும் இராஜேந்திர பட்டினம், மூன்றாவது புலியூர் இது பதஞ்சலி முனிவருக்கு காட்சிகொடுத்த தலம். **கேது பரிகாரஸ்தலம்.** இராஜராஜ சோழனுக்கு குழந்தை வரம் அருளியதலம். இந்த ஸ்தலம் விருத்தாசலத்திலிருந்து சுமார் 13 கி.மீ. தொலைவில் உள்ளது.

**இறைவன் : ஸ்ரீ நீலகண்டேசுவரர் என்னும் திருக்குமாரஸ்வாமி**

**இறைவி : நீலமலர்கண்ணி**

**ஸ்தல விருட்சம் : எருக்கு**

இராஜராஜ சோழனக்கு பிள்ளைவரம் அருளிய தலம். அதன்பயனால் இராஜேந்திர சோழன் பிறந்ததால் எருக்கத்தம்புலியூருக்கு இராஜேந்திர பட்டினம் என்னும் பெயரும் வந்தது. முருகப்பெருமானுக்கு சாப விமோசனம் கொடுத்து பேச்சாற்றல் அருளிய தலம். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்டநாயனாரின் பிறந்ததலம்.

சமீபத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்புக்கு – கணேஷ் குருக்கள் – 9487703524

## 4. ஓமாம்புலியூர்

நான்காவது புலியூர் **ஓமாம்புலியூர்** என்னும் குருபரிகாரதலம்.

**எருக்கத்தம்புலியூரில் இருந்து காட்டுமன்னார்கோவில் வழியாக ஓமாம்புலியூரை அடையலாம்.**

**இறைவன் : ப்ரணவ வ்யாக்ர புரீசுவரர் என்னும் துயர்தீர்த்தநாதர்.**

**இறைவி: புஷ்பலதாம்பிகை**



அம்பிகைக்கு மோட்ச மார்க்கத்தை ப்ரணவம் என்னும் ஓங்கார மந்திரத்தை ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வடிவாக உபதேசித்த திருத்தலம். வியாக்ரபாதருக்கும், பதஞ்சலி முனிவருக்கும் மோட்ச உபதேசம் அளித்த இடம். **குருபரிகாரதலம்.** இந்த ஊர் காட்டுமன்னார் கோவிலிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது.

தொடர்புக்கு – ஜகதீச குருக்கள் – 04144 (264845)

## 5. கானாட்டமுள்ளூர்



**கானாட்டமுள்ளூர்** என்னும் கானாட்டம்புலியூர் ஓமாம்புலியூருக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இத்திருத்தலம் ஆதிசேஷன் அவதாரமான ஸ்ரீ பதஞ்சலி முனிவரால் பெயர் பெற்றுள்ளது **(ராகு பரிகாரதலம்)**

காட்டுமன்னார் கோயில் அருகிலிருக்கும் முட்டம் என்னும் ஊரிலிருந்து சுமார் ஒரு கிமீ தூரத்தில் உள்ளது. ஓமாம் புலியூரிலிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில் உள்ளது.

**இறைவன் - ஸ்ரீ பதஞ்சலி நாதர்**

**இறைவி - கண்ணார்குழலி என்னும் கோலவளைகையம்மை, அம்புஜாக்ஷி.**

**ஸ்தல விருட்சம் வெள்ளெருக்கு.**

**தலதீர்த்தம் - சூரிய புஷ்கரணி**

விக்ரம சோழனால் கட்டப்பட்டது. நவபுலியூரின் அடுத்துவரும் புலியூர் யாவையுமே விக்ரம சோழனால் கட்டப்பட்டதாகும். பதஞ்சலிமுனிவரின் சிலாரூபம் உள்ளது. இராகுபரிகாரதலம் நாகதோஷ பரிகார ஸ்தலம். பதஞ்சலி முனிவர் பூஜித்து, பகவான் காட்சி கொடுத்த ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் பாடல் பெற்ற ஸ்தலம். சித்திரை ஒன்றாம் தேதி சூரியபகவான் வணங்கும் ஸ்தலம். கார்த்திகை நட்சத்திரம், சிம்ம ராசி, சிம்ம லக்னத்தில் உள்ளவர்கள் வழிபட சிறப்பு ஸ்தலம்.

தொடர்பு : ஜெயசந்திரன் குருக்கள் - 97903 33377, 9894684269.

## 6. சிறுபுலியூர்

சிறுபுலியூர் **புதன் பரிகாரதலம்,** மயிலாடுதுறை, கொல்லுமாங்குடி வழியாக இத்தலத்தை அடையலாம். மாயவரத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த கோவில், சிறுபுலியூரின் வெகு அருகிலிருக்கும் சிற்றூரில் நாடாகுடி என்னும் இடத்தில் அமைந்திருக்கிறது. புலிக்கால் முனிவரும், பதஞ்சலி முனிவரும்



நவபுலியூர் யாத்திரையை இணைந்தே நடத்தி இருக்கிறார்கள். மிகவும் வயதாகிய நிலையில் அவர்கள் சிறுபுலியூரை அடையும் போது இருட்டிவிட்டது. இவ்விடத்தில் அவர்கள் அரங்கனை நினைத்து இயலாமையால் மோட்ச மந்திரத்தை ஜபிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். சிதம்பரத்தில் இருந்து எம்பெருமான்

வழித்துணைநாதராக எழுந்தருளி அவர்கள் ஸ்ரீரங்கத்தை அடைய இன்னும் தூரமிருப்பதை உணர்த்துகிறார்.

**இறைவன் வழித்துணைநாதர் என்னும் மார்க்கபந்தீஸ்வரர் மிகச்சிறிய ஆலயம்.** இவ்வாலயம் திருப்பணி செய்யப்பட்டு பெரியதாக கட்டப்படவேண்டும். அதே சமயம் ஸ்ரீரங்கத்தில் இருந்து அரங்கனும் பாலரங்கனாக இங்கு எழுந்தருளி இவ்விரு முனிவர்களுக்கும் தரிசனம் அருளியதால் சிறுபுலியூர் 108 திவ்ய தேசத்திலும் ஒன்றாக ஆயிற்று. எருக்கத்தம்புலியூரில் இருந்து சிதம்பரம், மாயவரம், கொல்லுமாங்குடி வழியாக 85 கிமீ தூரம் உள்ளது. தொடர்புக்கு – திரு. சங்கர் குருக்கள் – 9791514671

## 7. அத்திப்புலியூர்



சிறுபுலியூரிலிருந்து நன்னிலம் வழியாக திருவாரூரை அடைந்து அங்கிருந்து அத்திப்புலியூரை அடையலாம். ஆதிபுலியூர் என்னும் **அத்திப்புலியூர் சுக்ரபரிகாரத்தலம்.** நாகப்பட்டினம் அருகில் உள்ள கீவளூர் என்னுமிடத்துக்கு அருகில் உள்ளது. இறைவன் பதஞ்சலி முனிவருக்கும் வியாக்ரபாதருக்கும் உமா மஹேஸ்வரராக கல்யாண சுந்தரராக திருமணக்கோலத்தில் தரிசனம் கொடுத்த இடம் திருமணக்காட்சி மூலவர் பின்னால் உள்ளது. அகத்தியருக்கும் திருமணக்காட்சி கொடுத்த இடம்.

**இறைவன்-சிதம்பரேசர், இறைவி-சிவகாமசுந்தரி,** திருமணவரம் அருளும் தலம். தொடர்புக்கு – S. விஸ்வநாத குருக்கள் – 9751195622, 9943596849

# 8. தப்பளாம்புலியூர்



தப்பளாம்புலியூர் என்னும் மண்டூகவியாக்ரபுரம் திருவாரூருக்கு தென்கிழக்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மண்டூக மகரிஷிக்கும் வியாக்ரபாதருக்கும் அருளாசி வழங்கிய இடம். வியாக்ரபாதரின் புலிக்கால் புலிக்கை திருமேனியை நீக்கி முன்புபோல் பொலிவை பெற்றுத்தந்த இடம். பதஞ்சலி, வியாக்ரபாதர், மண்டூக மகரிஷி மூவருமே திருநடனக்காட்சியை கண்டுகளித்ததால் நடராஜ மூர்த்தமே கல்லால் வடிவமைக்கப் பெற்று கோஷ்டத்தில் இடம் பெற்றுள்ளது. மண்டூகவியாக்ரபுரம் என்னும் திருநாமம் இவ்விடத்திற்கு ஏற்பட்டது. தமிழில் **தப்பளாம்புலியூர்** என்றழைக்கப் பெற்றது. **சனி பரிகாரஸ்தலம்.**

**இறைவன்-வியாக்ரபுரீசுவரர், இறைவி-நித்யகல்யாணி அம்மன், ஸ்தல விருட்சம் - காட்டாத்தி மரம் மற்றும் வன்னி மரம். தீர்த்தம்-வியாக்ரபாத தீர்த்தம், பதஞ்சலி தீர்த்தம்.**

ஸ்வயம்பு மூர்த்தம், மிக அழகிய திருக்குளம் வியாக்ரதீர்த்தம் பின்புறமாக உள்ள திருக்குளம் பதஞ்சலி தீர்த்தம். இது சனிபரிகாரதலமாக அமைந்துள்ளதால் சனீஸ்வரபகவான் கிழக்கு நோக்கி தனி சந்நிதியாக கோயில் கொண்டுள்ளார். காசியில் உள்ளதுபோல ஏகபாதருத்ரர் மிகப்பெரிய திருமேனியாக தனி சந்நிதி கொண்டுள்ளார். சூரியன், இரண்டு பைரவர்கள் ஆகியோரும் உள்ளனர். ஸப்தமாதா ஸந்நிதி ஜேஷ்டாதேவி, வீரபத்திரர் விநாயகருடன் கலைநயத்தோடு மிளிர்கிறது. ஜேஷ்டாதேவி தன் இரு குழந்தைகளான மந்தன் மற்றும்

மாந்தியோடு சற்றே பெரிய திருமேனியுடன் விளங்குகிறார். 8ம் நூற்றாண்டுவரை ஸ்ரீ ஜேஷ்டாதேவி வழிபாடு செழித்திருந்தது. ஏழ்மை, பகைமை, சோம்பல், இயலாமை போன்றவைகள் அழிய ஜேஷ்டாதேவி வழிபாடு மிக சிறந்ததாகும். முக்கியமாக பெண்கள் இந்த தேவியை வழிபட குடும்பத்தில் இல்லாமை என்பது அழியும். **Stress** என்று சொல்லக்கூடிய பழைய நினைவுகளால் வாடி வதங்குபவர்கள் இந்த தேவிக்கு கேட்டை நக்ஷத்ரம் மற்றும் அஷ்டமி தினங்களில் பால் அபிஷேகம் செய்து அன்னம்படைத்து காக்கைக்கு இட்டு வழிபட்டால் இதுபோன்ற தொல்லைகளில் இருந்து விடுபடலாம். இங்குள்ள மூன்று கால்களுடைய ஜுரஹரேஸ்வரர் மிகுந்த வரப்பிரசாதி ஆவார். சிறு குழந்தைகளுக்கு ஜுரம் முதலிய நோய்கள் அண்டாமல் இருக்க ஜுரஹரேஸ்வரரை வழிபட வேண்டும். இங்குள்ள சனீஸ்வரர் அனுக்ரஹ சனீஸ்வரர் என்றே அழைக்கப்படுகிறார். ஏழரை சனி, அஷ்டமச் சனி, சனிதிசை, கண்டக சனி ஆகிய காலங்களால் பாதிக்கப்பட்டோர் இங்குள்ள சனீஸ்வரர், பைரவர் மற்றும் ஏகபாதருத்ரர் சன்னதிகளில் நல்லெண்ணை தீபம் ஏற்றி அபிஷேக அர்ச்சனை ஆராதனைகள் தங்கள் நட்சத்திரம் வரும் நாளிலோ அல்லது சனிக்கிழமைகளிலோ செய்து வழிபடலாம். ஒன்றும் வசதியில்லாதவர்கள் கூட ஒரு நல்லெண்ணெய் தீபம் ஏற்றி கோவிலை 9 முறைவலம் வந்தால் நல்ல மாற்றத்தை காணலாம்.

## அம்பிகை ஸ்ரீ நித்யகல்யாணி

அகில உலகங்களையும் காத்து அருளும் அன்னையின் பல்வேறு வடிவங்கள் சிவத்தலங்களின் பெருமை பெற்று விளங்குகின்றன. தப்பளாம்புலியூரின் அருள் அன்னை "ஸ்ரீ நித்ய கல்யாணி" பெயரிலேயே திருமண வரம் அருளும் கருணாமூர்த்தியாக விளங்குகிறாள். இவ்வூரில் அன்னை குடிகொண்ட வரலாறு மிகப்பழமையானது. கடையம் பகுதியில் வாழ்ந்த ஒரு சித்தரின் உபாசனாமூர்த்தியான அம்பிகை

அவருடன் பெண்குழந்தை வடிவினளாக விளையாடி நின்றாள். மாறாத பக்திகொண்ட சித்தரும் அன்னைக்கு "கல்யாணி" என்று பெயர்இட்டு அழைத்து அகமகிழ்ந்தார். ஒருமுறை மலையாளதேசத்தில் திருமணம் ஒன்றிற்கு சென்றுவிட்டு திரும்பும்போது குழந்தை கல்யாணி வடிவிலான அன்னை அவருடன் வரவில்லை. மிகவும் வருத்தமுற்ற சித்தர் சிவபெருமானிடம் முறையிட்டு வருந்தியபோது சிவபெருமான் "நின்மகளை யாம் திருமணம் முடித்துவிட்டோம். அவளை தேடவேண்டாம். அவள் இனி நித்யகல்யாணியாக என்னுடன் கோயில் கொள்ளட்டும் என்று ஆறுதல் அளித்து மறைந்தார். அன்று முதல் சித்தரும் அன்னையை நித்ய கல்யாணி வடிவில் மானஸ உபாசனை செய்து வழிபட ஆரம்பித்தார். அன்னையின் பேரருள் காரணமாக நன்கு ஆன்மீக முதிர்ச்சி அடைந்த சித்தரும் கடையம் விட்டு சிவாலய தரிசனத்திற்கு பல்வேறு திருத்தலங்களுக்கு புறப்பட்டார். அவர் தப்பளாம்புலியூரில் சிறிது காலம் தங்கி வியாக்ரபாதரையும் இதர தெய்வங்களையும் அன்னையுடன் சேர்த்து வழிபட்டு கொண்டிருந்தார். அவரது இறுதிகாலம் நெருங்கியதை உணர்ந்த சித்தர் தான் பலகாலம் உபாசித்த அன்னையை இவ்விடத்திலேயே பிரதிஷ்டை செய்துவிட்டு சமாதியடைந்துவிட்டார். விக்ரமசோழனால் 11ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இவ்வாலயம் ஆதியில் அம்பிகை சந்நிதி இல்லாமல் தான் இருந்தது. ஆனால் அம்பிகையின் அருளால் ஸ்ரீ நித்யகல்யாணி என்ற திருநாமத்துடன் இங்கு அன்னையின் திருசந்நிதி அமைந்தது. பெயருக்கு ஏற்றாற்போல் கல்யாணம் மற்றும் குழந்தைவரம் பெற்ற பக்தர்கள் இங்கு அநேகம். அம்பிகை இங்கு **போகமோட்சப்ரதாயினியாக** இருப்பதாக நமது மஹாபெரியவா என்னும் காஞ்சி மாமுனிவரால் உணர்த்தப்பட்டவள். அம்பிகை இகபர சுகங்களை அளித்து எல்லாம் வல்ல மோட்சத்தையும் அளிப்பதாக பெரியவர் கூறினாராம். அன்னைக்கு இங்கு மஞ்சள் காப்பு, மல்லிகை மலர்மலை, லலிதா சகஸ்ரநாம பாராயணம் மிகவும் விசேஷமாகும்.

கடையம் கிராமத்தில் சிலகாலம் தங்கியிருந்த மஹா கவி பாரதியார் இவ்வன்னையின் அருளாலேயே புகழ்பெற்ற "சின்னஞ்சிறுகிளியே" "ஒடிவிளையாடு பாப்பா" போன்ற பாடல்களை எழுதியுள்ளார். மிகப்பெரும் படைப்பான பாஞ்சாலி சபதமும் இந்த அன்னையின் அருளால் எழுதப்பட்டது. மாதங்கியாய், மீனாட்சியாய், மனோன்மணியாய், ஸ்ரீபாலாவாக விளங்கும் ஸ்ரீ நித்ய கல்யாணியை 7 வாரங்கள் (செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமைகளில் 7 மஞ்சள் (நல்ல நீண்ட முனை முறியாத) எடுத்து சென்று அன்னையிடம் சமர்பித்து அதை பிறகு வீட்டிற்கு கொண்டுவந்து இழைத்து பூசியோ அல்லது மஞ்சள் நீரைப் பருகியோ வந்தால் பக்தர்களின் கோரிக்கை நிறைவேறும். வெளியூர் பக்தர்கள் 21 மஞ்சளை கொண்டுவந்து வழிபட்டு அதை உபயோகித்து வருவார்களேயானால் அம்மஞ்சள் தீரும் முன் அவர்கள் குறை நிவர்த்தியாகும். கல்யாணவரமும் குழந்தை வரமும் கிடைப்பது உறுதி. அன்னைக்கு வளைகாப்பின் போது வளையல் எடுத்துவந்து ஸமர்பிக்க வேண்டும். அதுபோன்று மல்லிகை மலர்கள் அன்னைக்கு மிகுந்த விருப்பமான மலராகும். ஸகஸ்ரநாம அர்ச்சனையும், மஞ்சள்காப்பும் சிறந்த பரிகாரங்களாகும். அன்னையின் ஸந்நிதியில் மாவிளக்கு இடும் அன்பர்கள் வீட்டில் எல்லா செல்வங்களும் கிடைப்பது உறுதி.

**ஏகபாத ருத்ரர்**



இங்குள்ள ஏகபாதருத்ரர் மிகவும் விசேஷமானவர்.

அமாவாசைக்கு முன்பு வரும் சதுர்த்தசி தினம், மற்றும் அமாவாசை தினங்களில் இவரை வழிபட எல்லா நலன்களும் கிடைக்கும். மாதம்தோறும் வரும் திருவாதிரை நட்சத்திர நாளில் அபிஷேக

ஆராதனைகள் செய்வது விசேஷம். நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடவேண்டும்.

### கோஷ்டத்தில் உள்ள நடராஜமூர்த்தம்

இவ்வாலயத்தில் வேறு பல விசேஷங்களும் அமைந்துள்ளது. பொதுவாக கோஷ்ட தெய்வங்களில் முதலில் நடன விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர் அல்லது மஹாவிஷ்ணு, பிரும்மா கடைசியாக துர்க்கை ஆகிய வடிவங்களே எழுந்தருளி இருக்கும். தப்பளாம்புலியூரில் பதஞ்சலி, வியாக்கிரபாதர் மற்றும் மண்டூக மகரிஷிக்கு திருநடனக்காட்சி அருளியதால் கோஷ்டத்தில் மிக அற்புத வடிவான ஆனந்த நடராஜமூர்த்தம் சிறந்த வேலைப்பாடுடன் செதுக்கப்பட்டு எல்லா தேவர்களுடனும் ரிஷிகளுடனும் காட்சிகொடுப்பதாக அமைந்துள்ளது. காரைக்கால் அம்மையாரும் இந்த நடனக்காட்சியை கண்டுகளித்ததாக தெரிகிறது. மிக அற்புதமான வடிவம். மாதந்தோறும் வரும் பூசம் நட்சத்திரம் அன்றும் மற்றும் தைப்பூசம் அன்றும் ஸ்ரீ நடராஜபெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வது சிறப்பு.

மேலும்லிங்கோத்பவருக்கு பதிலாக அவ்விடத்தில் அர்த்தாநாரீஸ்வரர் அமைந்துள்ளது. அவருக்கு நேர் எதிராக மகாலக்ஷ்மி சன்னிதியும் அமைந்துள்ளது. மலையாள தேசத்தில் இருந்து வந்தமையால் ஸ்ரீ நித்யகல்யாணியுடன் ஸ்ரீ சாஸ்தாவுக்கும் இங்கு ஸ்தல விருக்ஷம் அருகில் சிறிய சந்நிதி உள்ளது.

### சனீஸ்வரபகவான்

மிகச்சிறந்த சனீஸ்வர தலங்களில் ஒன்றான தப்பளாம்புலியூர் கிழக்கு நோக்கி தனி சந்நிதியுடைய சனீஸ்வரபகவானை கொண்டுள்ளது. சனீஸ்வரர் இங்கு அனுக்ரஹ சனீஸ்வரர் என்ற பட்டம் தாங்கியுள்ளார். அவரை திங்கள் மற்றும் சனிக்கிழமைகளில் வழிபட்டு நற்பலன்கள் பெறுவோமாக. ஏழரைச்சனி, அஷ்டமச்சனி, கண்டகசனி, சனிதிசை மற்றும்



சனிபுக்தி மற்றும் சனீஸ்வரர் ஜாதகத்தில் நீசமடைந்து பலமிழந்து இருக்கும் அன்பர்கள் இங்கு சனீஸ்வரபகவானுக்கு சுத்தமான நல்லெண்ணெய் தீபமேற்றி வன்னியிலையால் அர்ச்சனை செய்து வழிபட சிறந்த மாற்றங்களை காணலாம். எள் முடிச்சு தீபம் ஏற்றக்கூடாது, மாறாக செக்கு நல்லெண்ணெய் தீபம் மண் அகலில் ஏற்றவேண்டும். சுத்தமான பஞ்சு திரிகொண்டு தீபம் ஏற்றவேண்டும். அன்னதானமும் ஏற்புடையதே, சனிக்கிழமைகளில் எள் அன்னமும், தயிர்சாதமும் நிவேதித்து அன்னதானம் செய்யலாம்.

தொடர்புக்கு : டி.பி.வெங்கட்ராமன் - 9840036514

S.கல்யாணராமன் - 9942984901

சுவாமிநாத குருக்கள் - 9786582271

## 9. பெரும்புலியூர்

இந்த யாத்திரையை நிறைவு செய்ய மங்களகாரனான செவ்வாயின் பரிகாரத்தலமாக பெரும்புலியூர் தரிசிக்கப்படுகிறது.



ஒன்பதாவது புலியூர் ஆன பெரும்புலியூர் திருவையாறு அருகில் அமைந்துள்ளது. எதையும் முடிக்கும்போது மங்களம் என்றே அழைப்போம் நவக்கிரகங்களில்

மங்களன் என்று அழைக்கப்படும் **செவ்வாய் பரிகாரத்தலம்.** யாத்திரையை நன்கு முடிக்க மனபலமும் உடல்பலமும் வழங்கும் இறைவன் இங்கும் வியாக்ர புரீசுவரராக வணங்கப்படுகிறார். திருஷ்டி தோஷங்கள் எல்லாம் நீக்கும் திருத்தலம்.

**இறைவன் - வியாக்ரபுரீசுவரர்**

**அம்பிகை - சௌந்தர்ய நாயகி**

தொடர்புக்கு : திரு. சுரேஷ்குருக்கள் – 94 43447826

தப்பளாம்புலியூர் ஆலய தோற்றம் போன்று இங்கும் கல்லால் ஆன நடராஜமுர்த்தம் அமைந்தள்ளது. வியாக்ரபாதர் பூசித்த நிறைய திருத்தலங்கள் புலியுர் மற்றும் புலிப்பாக்கம் என்ற பெயர் பெற்றாலும் நவபுலியூரில் மட்டுமே இறைவன் ஸ்வயம்புவாக எழுந்தருளி, திருநடனகாட்சி அளித்ததால் இந்த ஒன்பது தலங்களும் நவபுலியூர் ஆயிற்று. நவபுலியூர் யாத்திரையை மேற்கொள்ளும் அன்பர்கள் திருவாழ்வில் மாற்றங்கள் ஏற்படுவது உறுதி.

ஒன்பது புலியூர்களையும் தரிசித்த ஸ்ரீ வியாக்ரபாதரும் ஸ்ரீ பதஞ்சலி முனிவரும் காவிரிக்கரையின் ஓரமாகவே ஸ்ரீரங்கத்தை சென்றடைகிறார்கள். அரங்கனின் விருப்பப்படி ஸ்ரீ பிரம்மாவின் தரிசனமும் அவர்கள் பெறவேண்டும் என்பதால் பிரும்மாவின் அருள்தரும் இடமான **திருப்பட்டூரை** அடைகிறார்கள்.



இருவரும் அங்கே ஸ்ரீ பிரும்மபுரீசுவரரையும், ஸ்ரீ பிரம்மாவையும் வணங்கி ஜீவஸமாதியைய

மேற்கொள்கிறார்கள். எம்பெருமான் ஆடல்அரசனின் திரு ஆணைப்படியும் எம்பெருமான் அரங்கனின் பேரருளாலும் அவர்கள் சிவ விஷ்ணுவாக விளங்கும் பரப்பிரம்ம ஜோதியில் ஐக்கியமாகிவிடுகிறார்கள். ஒரே பரம்பொருளின் இருவேறு வடிவங்களான ஆடல்வல்லவரும் அரங்கனும் ஒன்றாகவே இணைந்து இந்த யாத்திரையை மேற்கொள்ளும் ஜீவன்களை அவர்களின் கர்மவினைகளை அழித்து அருளாசி வழங்கி அவர்களை மோட்ச பாதையில் அழைத்து செல்கிறார்கள். தூய உள்ளன்போடு செய்யப்படும் இந்த யாத்திரை 9 அல்லது 12 நாட்களாவது ஸாத்வீக உணவருந்தி இறைநாமத்தில் மூழ்கி நம்பிக்கையோடு செய்தோமேயானால் நம்முடைய தீர்க்கமுடியாத கர்மவினைகள் முற்றிலும் நீங்கப்பெற்று தடைபட்ட காரியங்கள் யாவும் புதுப்பொலிவோடு நடைபெறும். இந்த யாத்திரையின் கடைசி பகுதியான திருப்பட்டூரை மட்டுமே வணங்கும் பக்தர்கள் பலர் மாற்றத்தை உணரமுடியாமல் போகிறார்கள்.

திருப்பட்டூருக்கு முன்பாக இந்த ஒன்பது திருத்தலங்களையும் தரிசிக்க வேண்டும். திருப்பட்டூருக்கு பிறகு **ஸ்ரீரங்கத்தை** தரிசித்து நேராக வீடு வந்துவிட வேண்டும். நடுவில் வேறு தலங்களை தரிசிக்க கூடாது. ஏனெனில் இது காசியாத் திரை போன்று மிகபலம் வாய்ந்த யாத்திரை. யாத்திரையின் போது முன்ஜன்ம தீவினைகள் யாவும் கரைக்கப்படவேண்டும் என்று ஒன்பது தலங்களிலும் மனமுருகி வழிபட வேண்டும். நவபுலியூர் யாத்திரை நவக்ரஹங்களின் அருளையும் பெற்றுத்தரும். பக்தர்கள் வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டு மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். தடைப்ட்ட திருமண வரங்கள், குழந்தை வரம், நோயின்மை, தொழில்வளர்ச்சி, கடன்தொல்லை நீங்குதல், குடும்பங்களில் ஏற்படும் சாபங்கள், வேறுவகையான சாபங்கள்

எல்லாம் மறைவதை கண்கூடாக பார்க்கலாம். பண்டையகாலங்களில் மக்கள் பரிகாரமாக தேர்ந்தெடுத்தது இதுபோன்ற யாத்திரைகளை மட்டுமே. இது தெரியாமல் நாம்தான் வேறுவழிகளில் முயற்சித்து பலனில்லாமல் ஏமாற்ற மடைகிறோம். எல்லாம் வல்ல ஆடலரசனின் அருளும், அரங்கனின் அருளும் எல்லோரையும் சென்றடைய அவர்களின் திருப்பாதங்களையே பணிந்து நிற்கின்றோம்.

இந்த யாத்திரையை மேற்கொள்ளும் போது நம்மோடு ஸ்ரீ வியாக்ரபாதரும், ஸ்ரீபதஞ்சலி முனிவரும் துணைநின்று பரம்பொருளின் ஆசியை நமக்கு பெற்றுத்தருவார்கள் என்பது திண்ணம். நவபுலியூர் தரிசனம் மிகவும் பழமையானதும், மிகுந்த நற்பலன்களை வாரி வழங்குவதுமாகும்.

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கொளியாய்,
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியனே்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகி பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராயத் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்


மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் ளிருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டனே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்.*

# குறிப்பு



வியாக்ரபாத முனிவர் பதஞ்சலி முனிவர்

